தமிழக அமைச்சரவை 2வது முறையாக மாற்றம்

நாளை அமைச்சராக பதவி ஏற்கிறார் உதயநிதி ஸ்டாலின்

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை, சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை வழங்க முடிவு

சென்னை, டிச.13

தமிழக அமைச்சரவை 2வது முறையாக மாற்றப்படுகிறது. கவர்னர் மாளிகையில் நாளை (புதன்கிழமை) காலை நடைபெறும் விழாவில் உதயநிதி ஸ்டாலின் அமைச்சராக பதவி ஏற்கிறார்.

முதலமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலினின் மகன் உதயநிதி ஸ்டாலின் கடந்த ஆண்டு (2021) நடந்த சட்டசபை தேர்தலில் தி.மு.க. சார்பில் சென்னை சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் போட்டியிட்டு அதிக ஓட்டுகள் வித்தியாசத்தில் வென்று முதல் முறையாக எம்.எல்.ஏ. ஆனார்.

கட்சியிலும் தி.மு.க. இளைஞர் அணி செயலாளராக உதயநிதி ஸ்டாலின் உள்ளார். கடந்த மாதம் 27 ந் தேதி உதயநிதி ஸ்டாலினின் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. அவருக்கு அமைச்சர்களும், கட்சியின் முன்னணி தலைவர்களும், மாவட்ட நிர்வாகிகளும் வாழ்த்து தெரிவித்தனர்.

இந்த விழாக்களில் பேசிய சில அமைச்சர்கள், 'உதயநிதி ஸ்டாலினுக்கு அமைச்சர் பதவி வழங்க வேண்டும்' என்று வலியுறுத்தினர். இதுதவிர பல மாவட்டங்களில் நடந்த கட்சி நிர்வாகிகள் கூட்டத்திலும் இதே கோரிக்கையை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு தலைமைக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

சமீபத்தில் உதயநிதியிடம் அமைச்சர் பதவி குறித்து கேட்டபோது, 'அதை முதல்வர் தான் முடிவெடுப்பார்' என்று தெரிவித்தார்.

இந்த நிலையில் உதயநிதி ஸ்டாலினை அமைச்சராக்க கவர்னர்

ஆர்.என்.ரவிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பரிந்துரை செய்தார். இதனை கவர்னர் ஏற்றுக்கொண்டார்.

இதையடுத்து, நாளை காலை 9.30 மணிக்கு கவர்னர் மாளிகையில் உதயநிதி அமைச்சராகப் பதவியேற்க உள்ளார்.

400 பேருக்கு அழைப்பு

இது தொடர்பாக கவர்னரின் செயலர் ஆனந்த ராவ் வி.பாட்டீல் வெளியிட்ட செய்திக்குறிப்பில், "தமிழக முதல்வர் பரிந்துரையின்படி, சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டப்பேரவை உறுப்பினர் உதயநிதி ஸ்டாலினை, தமிழக அமைச்சரவையில் சேர்க்க கவர்னர் ஒப்புதல் அளித்துள்ளார். இதையடுத்து பதவியேற்பு விழா கவர்னர் மாளிகையின் தர்பார் அரங்கில் 14ம் தேதி (நாளை) காலை 9.30 மணிக்கு நடைபெறுகிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சராக பொறுப்பேற்க இருக்கும் உதயநிதி ஸ்டாலினுக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை, சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறையை வழங்கவும் முடிவு செய்யப்பட்டு உள்ளதாக தகவல்கள் வந்துள்ளன.

விழாவில் கலந்துகொள்வதற்காக 400 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டு உள்ளது.

அமைச்சர்கள் எண்ணிக்கை 35 ஆக உயர்வு

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் சேர்த்து தமிழக அமைச்சரவையில் மொத்தம் 34 பேர் அமைச்சர்களாக உள்ளனர். உதயநிதி ஸ்டாலின் அமைச்சர் ஆவதால் அது 35 ஆக உயரும்.

இந்தநிலையில் அவருக்கு தலைமைச் செயலகத்தின் பிரதான கட்டிடத்தில் அமைச்சர் அறையை தயார் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. அங்குள்ள 2வது தளத்தில் அமைச்சர்கள் பொன்முடி, சக்கரபாணி அறைகளுக்கு அருகே அறை தயார் செய்யப்பட்டு வருகிறது.

அமைச்சரவை விரிவாக்கம் தவிர, சில மூத்த அமைச்சர்கள் கவனிக்கும் துறைகளும் மாற்றம் செய்யப்படும் எனத் தெரிகிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அமைச்சரவை கடந்த மார்ச் மாதம் முதல் முறையாக மாற்றி அமைக்கப்பட்டது. அதன்படி அமைச்சர் ராஜகண்ணப்பன் வகித்து வந்த போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கரிடமும், அவரிடம் இருந்த பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ராஜகண்ணப்பனுக்கும் மாற்றப்பட்டது. இதன் பிறகு 2வது முறையாக அமைச்சரவை நாளை மாற்றி அமைக்கப்படுகிறது.

கோவை காந்திபுரத்தில் ரூ.32 லட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்ட தமிழ்நாடு ஓட்டல்

அமைச்சர் மதிவேந்தன் திறந்தார்

கோவை, டிச.13–

கோயம்புத்தூர் மாவட்டம், காந்திபுரம், தமிழ்நாடு ஹோட்டலில் ரூ.32 லட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்ட உணவகத்தினை சுற்றுலாத் துறை அமைச்சர் டாக்டர். மா.மதிவேந்தன் திறந்து வைத்து பார்வையிட்டார்.

பின்னர் அமைச்சர்மதிவேந்தன் செய்தியாளர்களிடம் தெரிவித்த தாவது:– தமிழ்நாடு ஓட்டலில் உள்ள அறைகள், உணவகங்கள் ஆகியவை புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. அதன்படி, முதற்கட்டமாக சென்னை தீவுத்திடல், கோயம்புத்தூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, காஞ்சிபுரம், ராணிப்பேட்டை ஆகிய இடங்களில் உள்ள தமிழ்நாடு ஓட்டல்கள் புதுபிக்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் இந்த ஓட்டல்களின் வருமானம் அதிகரிக்கும், மேலும், புதுப்புது வகை உணவுகள் அறிமுகப்படுத்தப்பட உள்ளன. தனியார் ஓட்டல்களுக்கு இணையாக வருவாய் ஈட்ட வாய்ப்பு உள்ளது.

சுற்றுலாத்துறை மேம்பாட்டு திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டிலும் 10 முதல் 15 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, அந்தசுற்றுலா தளங்களில் வெவ்வேறு வசதிகள் கொண்டு வரப்பட்டுள்ளன. அதன்படி பிரப்பன்வலசை, கொல்லிமலை, ஜவ்வாது மலை, ஏலகிரி மலை, கொலவாய் ஏரி, பூண்டி ஏரிகள், குண்டாறு அணை, சிற்றாறு அணை, உள்ளிட்டவை புதியாக தேர்வு செய்யப்பட்டுள்ளன. மேலும்,

பூம்புகார் புதுப்பிக்கப்பட உள்ளது. ஒகேனக்கல் சிறந்த சுற்றுலா திட்டம் உருவாக்கப்பட்டு அதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாவட்டம் தமிழ்நாடு ஓட்டலில், ஃபால் சீலிங், ஏசி வசதி, மின் விளக்குகள், தரை மற்றும் சுவர் ஓடுகள், உள்ளிட்ட பல்வேறு வசதிகள் புதுப்பிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மேலும், பொள்ளாச்சியில் பலூன் திருவிழா தனியார் பங்களிப்புடன் நடைபெற்றுவந்தது. தற்போது, முதல்முறையாக தமிழ்நாடு அரசின் சார்பில் நடைபெறவுள்ளது. இவ்விழாவின் போது பல்வேறு கலைநிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. இவ்விழா நடைபெறும் இடம் இன்று ஆய்வு செய்யப்படவுள்ளது. இதுபோன்ற பல்வேறு திட்டங்கள் சுற்றுலாத்துறையை மேம்படுத்த கொண்டு வரப்பட்டுள்ளன.

இவ்வாறு அமைச்சர் மதிவேந்தன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை இயக்குநர் சந்தீப் நந்தூரி, கலெக்டர் சமீரன், மாநகராட்சி ஆணையாளர் மு.பிரதாப், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா.கார்த்திக், மத்திய மண்டலக்குழு தலைவர் மீனாலோகு, உதவி சுற்றுலா அலுவலர் துர்காதேவி, தமிழ்நாடு ஓட்டல் மண்டல மேலாளர் வெங்கடேசன், மேலாளர் பாலசுப்பிரமணியம், உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

மாநிலங்களுக்கு தொடர்ந்து 5 ஆண்டுகளாக ஜி.எஸ்.டி. இழப்பீடு வழங்கி வந்துள்ளோம்

நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் விளக்கம்

புதுடெல்லி, டிச.13–

மாநிலங்களுக்கு தொடர்ந்து 5 ஆண்டுகளாக ஜி.எஸ்.டி. இழப்பீடு வழங்கியும் வந்துள்ளோம் என்று மக்களவையில் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் விளக்கம் அளித்தார்.

மாநிலங்களுக்கு ஜி.எஸ்.டி. இழப்பீடு வழங்குவது தொடர்பான பிரச்சினை பற்றி நாடாளுமன்ற மக்களவையில் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், நேற்று கேள்வி நேரத்தின்போது பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

மாநிலங்களுக்கு அனைத்து ஜி.எஸ்.டி. (சரக்கு சேவை வரி) இழப்பீடுகளை வழங்குவதற்கும் மத்திய அரசு உறுதி பூண்டுள்ளது. இதைத்தொடர்ந்து 5 ஆண்டுகளாக வழங்கியும் வந்துள்ளோம்.

மாநிலங்களின் அக்கவுண்டண்ட் ஜெனரல் (தலைமை கணக்காயர்), தங்கள் மாநிலம் இந்த அளவு ஜி.எஸ்.டி. இழப்பீடு பெற வேண்டி உள்ளது என்று சான்றிதழ் வழங்க வேண்டும். அந்த சான்றிதழுடன் தொடர்புடைய ஆவணங்களை சமர்ப்பித்து மாநில அரசு கோரிய உடனேயே ஜி.எஸ்.டி. இழப்பீடு வழங்கப்படுகிறது.

மாநிலங்களின் தலைமை கணக்காயர் சான்றிதழில் தாமதம் ஏற்படுகிறபோது, ஜி.எஸ்.டி. இழப்பீடு வழங்குவதும் நிலுவையாகிறது என்பது வெளிப்படை.

எனவே தலைமை கணக்காயர் சான்றிதழ், உரிய ஆவணங்களுடன் மாநிலங்களிடம் இருந்து வருகிறபோது, அந்த கணத்திலேயே பணம் விடுவிக்கப்படுகிறது.

மத்திய அரசு தரப்பில் அவ்வப்போது வழங்கி சரி செய்யப்பட்டு விடுகிறது. செஸ் வரியாக பணம் வருகிறபோது, அது மாநிலங்களுக்கு பகிர்ந்து அளிக்கப்படுகிறது.

தலைமைகணக்காயர்மாநிலங்களின் ஜி.எஸ்.டி. இழப்பீடு கோரல்களை ஏற்று சான்றளிக்காதபோது, அதை மாநில அரசுகள் விரைவுபடுத்த வேண்டும். என் கைக்கு அது உரிய ஆவணங்களுடன் கிடைத்த உடனேயே பணம் விடுவிக்கப்பட்டு விடுகிறது.

மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கு இதில் வாக்குவாதம் இருந்தாலும், அது மத்திய மற்றும் மாநில அரசு அதிகாரிகள் ஒன்றாக அமர்ந்து பேசுகிறபோது தீர்க்கப்பட்டு விடும்.

பல மாநிலங்கள், ஜி.எஸ்.டி. இழப்பீடு நிலுவையில் போடப்படு வதாக நம்புகின்றன.

ஆனால் பணம், வரிசெலுத்துகிற மக்களுடையது என்கிற நிலையில், தேவையானஅனைத்து ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படாததால்தான் ஜி.எஸ்.டி. இழப்பீடு வழங்குவது நிலுவை ஆகிறது.

ஜூன் மாதத்துக்கான ஜி.எஸ்.டி. இழப்பீட்டில் பாதியளவு ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டது. மீதியும் செஸ் வரி வசூலானதும் வழங்கப்பட்டு விடும்.

இவ்வாறு அவர் கூறினார்.

வழக்குகளை இழுத்தடிக்க தேவையற்ற மனுக்களை தாக்கல் செய்வோருக்கு அபராதம்: கீழ் கோர்ட்டுகளுக்கு ஐகோர்ட் அதிரடி உத்தரவு

சென்னை. டிச.13–

வழக்குகளை இழுத்தடிக்கும் நோக்கத்துடன், தேவையற்ற மனுக்களை தாக்கல் செய்பவர்களுக்கு அதிகபட்ச அபராதம் விதிக்கப்பட வேண்டும் என்று கீழ் கோர்ட்டுகளுக்கு சென்னை ஐகோர்ட் அதிரடியாக உத்தரவிட்டுள்ளது.

சென்னையை சேர்ந்த சரளா என்பவருக்கு சொந்தமான கட்டிடத்தில் டாக்டர் பார்த்தசாரதி என்பவர் பல ஆண்டுகளாக கிளினிக் நடத்தி வருகிறார். இதில் வாடகை தொடர்பாக இருதரப்பினருக்கும் பிரச்சினை உள்ளது. இதுகுறித்து சென்னையில் உள்ள சிறு வழக்குகளை விசாரிக்கும் கோர்ட்டில் வழக்கு நிலுவையில் உள்ளது. இதில், டாக்டர் பார்த்தசாரதிக்கு எதிராக சரளா கீழ் கோர்ட்டில் இடைக்கால உத்தரவு பெற்றுள்ளார். அதை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் பார்த்தசாரதி வழக்கு தொடர்ந்துள்ளார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி எஸ்.எம்.சுப்பிரமணியம் பிறப்பித் துள்ள உத்தரவில் கூறியிருப்பதாவது:

கீழ் கோர்ட்டில் நிலுவையில் உள்ள வழக்கை இழுத்தடிக்கும் நோக்கத்துடன் வாடகைதாரர்கள் வழக்கை இழுத்து அடித்துக் கொண்டே போகலாம். ஆனால், அதற்கு கோர்ட்டு ஒரு துருப்புச்சீட்டாகி விடக்கூடாது. இந்த வழக்கில் 25 ஆண்டுகளாக மனுதாரர் தனது கிளினிக்கை அந்த இடத்தில் நடத்தி வருகிறார். 100 ஆண்டுகள் பழமையான அந்த கட்டிடத்தை இடித்துவிட்டு புதிதாக கட்டிடம் கட்ட வேண்டும் என்ற நில உரிமையாளர் விரும்புகிறார். அதற்கு இடையூறாக டாக்டர்அந்த இடத்தில் வாடகை கொடுக்காமல் கிளினிக்கை நடத்திக்கொண்டும், வழக்கையும் முடிந்த அளவுக்கு இழுத்தடித்தும் வருகிறார்.

மனித உயிர்களை காக்கும் டாக்டர்களின் சேவை உன்னதமானது. அதேநேரம் அந்த டாக்டர்கள் சமுதாயத்துக்கு நல்ல குடி மகனாகவும் இருக்க வேண்டும். இதுபோல பிரதான வழக்கை இழுத்தடிக்கும் நோக்கில் தேவையற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்படுவதாக கருதினால், அந்த மனுக்களை முடிந்தவரை கீழ் கோர்ட்டுகள் விரைவாக தீர்க்க வேண்டும். அதேபோல, தேவையற்ற மனுக்களை தாக்கல் செய்பவர்களுக்கு அதிகபட்ச அபராதம் விதிக்கப்பட வேண்டும். தனிநபர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. ஒவ்வொரு வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு கீழ் கோர்ட்டுகள் முடிவெடுக்க வேண்டும். ஒவ்வொரு குடிமகனுக்கும் நியாயமான காலத்துக்குள் நீதி கிடைக்க வேண்டும். மாறாக வழக்குகள் நீண்டகாலம் இழுத்துக்கொண்டே சென்றால் அவர்களுக்கு விரக்தியை ஏற்படுத்திவிடும்.

வாடகைதாரர்களின் உரிமைகள் சட்டரீதியாக எவ்வாறு பாதுகாக்கப்படு கிறதோ, அதே உரிமைகள் நில உரிமையாளர்களுக்கும் பாதுகாக்கப்பட வேண்டும். இருதரப்பும் வழக்கை இடித்தடிக்க கோர்ட்டுகள் அனுமதிக்கக்கூடாது. நவீன தொழில்நுட்பத்தின் உதவியால் முன்னேறிய இந்த உலகில், பொதுமக்களுக்கு எளிதான, விரைவான நீதி பரிபாலன முறை தேவைப்படுகிறது. தாமதிக்கும் நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு சமம் என்பதை மனதில் வைத்துக்கொண்டு நீதித்துறை செயல்பட வேண்டும்.

தாமதத்தால் நீதி பரிபாலன முறையின் மீது பொதுமக்கள் வைத்துள்ள நம்பிக்கையை இழக்க நேரிடும். அன்றாட நடைமுறைகள், மனுக்களை கையாளும் விதம், உடனடி உத்தரவுகள், தீர்ப்புகளை எளிதாக்குவது போன்றவை தான் நீதித்துறையின் தற்போதைய தேவையாக உள்ளது.

மனுதாரரான டாக்டருக்கும், நில உரிமையாளருக்கும் இடையே உள்ள இந்த வழக்கை சிறு வழக்குகளை விசாரிக்கும் கோர்ட்டு, 2 மாதங்களில் விசாரித்து முடிக்க வேண்டும். இந்த மனுவை தள்ளுபடி செய்கிறேன்.

இவ்வாறு நீதிபதி கூறியுள்ளார்.

முல்லைப் பெரியாறு அணை விவகாரம்: சென்னையில் தமிழக, கேரள தலைமைச் செயலாளர்கள் ஆலோசனை

சென்னை, டிச.13

முல்லைப்பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக தமிழக, கேரள தலைமைச்செயலாளர்கள் , இரு மாநில அதிகாரிகள் ஆலோசனை நடத்தினர்.

முல்லைப்பெரியாறு அணையின் நீர்த்தேக்க அளவு மற்றும் அந்தப்பகுதி மக்களின் பாதுகாப்பு தொடர்பாக புதிய அணை கட்டப்படும் என்று சமீபத்தில் கேரள மாநில கவர்னர் ஆரீப்கான் சட்டசபையில் அறிவித்தார். இதற்கு தமிழக அரசு தனது கடும் கண்டனத்தை பதிவு செய்திருந்தது.

இந்த நிலையில் கேரள மாநிலம் இடுக்கி மாவட்டத்தில் உள்ள முல்லைப்பெரியாறு அணை பகுதியில் புதிய அணை கட்டினால் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாது என்று கேரள அரசால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப குழு கூறியிருந்தது.

இதுதொடர்பான வழக்கில் சுப்ரீம் கோர்ட்டில்தமிழகஅரசுதனதுகருத்தை பதிவு செய்திருந்தது. அதில், அணை பாதுகாப்பு சட்டத்தின் அடிப்படையில் முல்லை பெரியாறில் பராமரிப்பு பணியை குறிப்பிட்ட காலத்துக்குள் மேற்கொள்ள, மாற்றியமைக்கப்பட்ட அணை பாதுகாப்பு கண்காணிப்பு குழுவுக்கு உத்தரவிட வேண்டும். நிலுவையில் உள்ள பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்க கேரள அரசுக்கு உத்தரவிட வேண்டும். பேபி அணையை பலப்படுத்தும் பணிக்காகவும், முல்லை பெரியாறு பிரதான அணையில் சிமென்ட் கலவை பூசுவதற்கும், அணையில் இடது பகுதி உபரி நீர் மதகை சரிசெய்வதற்கும், நிலநடுக்கங்களை கண்டறியும் 'செஸ்மிக்' உபகரணத்தை அமைக்கவும் மற்றும் வழக்கமான பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள தமிழகத்துக்கு உரிய அனுமதி அளிக்க வேண்டும்' என்று கோரியுள்ளது.

இந்த சூழலில், சென்னையில் தமிழக, கேரள தலைமைச் செயலர்கள் நேற்று ஆலோசனை நடத்தினர். நுங்கம்பாக்கம் நட்சத்திர ஓட்டலில் நடந்த இந்த ஆலோசனை கூட்டத்தில் தமிழக தலைமைச் செயலர் இறையன்பு, முதல்வரின் செயலர் த.உதயச்சந்திரன், கேரள தலைமைச் செயலர் ஜாய் மற்றும் இரு மாநில நீர்வளத் துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

இதில், முல்லை பெரியாறு விவகாரம் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

மீண்டும் பழைய ஓய்வூதியத் திட்டம் இல்லை: மத்திய அரசு தகவல்

புதுடெல்லி, டிச.13

மீண்டும் பழைய ஓய்வூதியத்திட்டம் இல்லை என்று மத்திய அரசு கூறி உள்ளது.

நாடாளுமன்ற மக்களவையில் நேற்று கேள்வி ஒன்றுக்கு மத்திய நிதித்துறை ராஜாங்க மந்திரி பகவத் கரத் எழுத்து மூலம் பதில் அளித்தார். அதில் அவர் மீண்டும் பழைய ஓய்வூதிய திட்டத்தைக் கொண்டு வரும் திட்டம் இல்லை என்று கூறி உள்ளார். மேலும் அவர் கூறுகையில், பழைய ஓய்வூதிய திட்டத்தில் ஊழியர்கள் தங்கள் கடைசி மாத சம்பளத்தில் 50 சதவீதத்தை ஓய்வூதியமாக பெற முடிந்தது. இந்தத் தொகை தேசிய ஓய்வூதிய திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்தது.

ராஜஸ்தான், சத்தீஷ்கார், ஜார்கண்ட் மாநில அரசுகள் தங்கள் மாநிலத்தில் பழைய ஓய்வூதியத்திட்டத்தைக் கொண்டு வரும் முடிவினைத் தெரிவித்துள்ளன. பஞ்சாப் அரசும் இதுபோன்ற அறிவிப்பை வெளியிட்டுள்ளது. ஆனால் ஓய்வூதியத் தொகை ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (பிஎப்ஆர்டிஏ), சட்டப்படி தேசிய ஓய்வூதிய திட்டத்தின்கீழ் (என். பி.எஸ்.) மாநில அரசுகளும், ஊழியர்களும் அளித்த பங்களிப்பை மாநில அரசுகளிடம் திரும்பத்தர சட்டப்படி இயலாது என அதில் கூறியுள்ளது.

ஆக்சிஜோ பைனான்சியல் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்
கார்ப்பரேட் அலுவலகம்: 7வது தளம், டவர் ஏ, குளோபல் பிசினஸ் பார்க், எம்.ஜி. சாலை, குருகிராம்–122001 தொடர்பு: 0124–4006603
மின்னஞ்சல்: compliance@oxyzo.in
இணையதளம்: www.oxyzo.in
பதிவு அலுவலகம்: கடை எண். ஜி–22சி (ஜூஜிஎம்) டி–1 (கே–34), கிரீன் பார்க் மெயின், புது டெல்லி, தெற்கு டெல்லி 110016
CIN: U65929DL2016PTC306174,
தொலைபேசி: 0124–4764758

அலுவலக மூடல் அறிவிப்பு

சில தவிர்க்க முடியாத காரணங்களால், ஆக்சிஜோ பைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்டானது எண். 18, திருமலைசாமி தெரு, சித்தாபுதூர், கோயமுத்தூர்–641 044ல் அமைந்துள்ள கிளை அலுவலகங்களில் ஒன்றை டிசம்பர் 12, 2022 முதல் மூன்று மாதங்களுக்குப் பிறகு மூடும் என்று இதன்மூலம் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. நிறுவனம் NBFC–ND–SI என்பதால் டெபாசிட் செய்பவர்களுக்கு எந்த ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை.
ஏதேனும் சந்தேகம் இருந்தால், தயவுசெய்து திரு. ஷரத் விக்னேஷ்வர் பிஎஸ் (தமிழ்நாடு மண்டலம் –மனித வளம் மற்றும் நிர்வாகம்) அவர்களை 8378993816ல் அணுகலாம்..
ஆக்சிஜோ பைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
தேதி: டிசம்பர் 12, 2022 Ms. பிங்கி ஜா
நிறுவன செயலாளர்

பெயர் மாற்றம்

ANUSHREE, க/பெ. Jhawahar பிறந்த தேதி: 08-02-1995 (பிறந்த இடம்: சென்னை) முகவரி: பழைய எண்.9 புதிய எண்.23, நரசைய்யர் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை - 600021, என்ற முகவரியில் வசிக்கும் நான், இனி **ANUSHREE JHAWAHAR** என்று அழைக்கப்படுகிறேன்.
Surname: **JHAWAHAR**
Given Name: **ANUSHREE**
Anushree

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

R. ஜெயலட்சுமி ராமசாமி
உன்னாத நாள் உண்டு,
உன்னை எண்ணாத நாளில்லை.
என்னாலும் உன்னோடு உயிர் உள்ளவரை,
என்றும் உன் நினைவோடு வாழும்....
தம்பி: V.R. தங்கவேல், ரங்கநாயகி,
மகன்: R.சக்திவேல், லட்சுமி சித்ரா,
மகள்கள்: அமுதலட்சுமி ஸ்ரீநிவாசன், R.சுப்பிரமணி வெண்ணிலா,
R.மஞ்சுளா ரமேஷ் & பேரக்குழந்தைகள்
யோகலட்சுமி டிரேடர்ஸ்
ஸ்ரீ ஸ்ரீனிவாசா டயர்ஸ், விழுப்புரம்
ஸ்ரீபெருமாள் டயர்ஸ்
ஸ்ரீ தாயார் & கோ, செ-2
Ph: 94441 13436 & 80720 46103

BEFORE THE XVII ASSISTANT CITY CIVIL COURT AT CHENNAI
O.S.NO. 3297 OF 2022

CANARA BANK
K.B. Nagar Branch
rep by its Senior Manager,
Mr. R. Ramesh,
No.4, First Main Road
Kasthuriba Nagar,
Adyar, Chennai – 600 020,
.... PLAINTIFF
-Vs-
1) M/s. Soft Touch,
Rep. by its partners
Flat No.2-D, Second Floor,
27, Sai Kiran Dev Apartment,
First Main Road,
Kasthuriba Nagar,
Adyar, Chennai-600 020.
2) Mrs. Helan Christy,
1-A, Lakshmi Nagar Second Street, Velachery,
Chennai-600 042.
3) J. Mary Jenifer,
No.44, Nainar Nadar Street,
Mylapore, Chennai-600 004.
...DEFENDANTS

Please take notice that the above Suit in O.S.No.3297 of 2022 was filed by the Plaintiff for recovery of money for a sum of Rs. 4,33,852/- (Rupees Four Lakhs Thirty three eight hundred and fifty two only). The Hon'ble XVII Assistant Judge, City Civil Court was pleased to order Paper Publication on 09.12.2022. Hence you are hereby directed to appear either in person or through a counsel on 12.01.2023 before the Hon'ble XVII Assistant Judge, City Civil Court, Chennai-104 at 10 A.M. without fail. Failing which the matter will be decided in your absence.

R. KRISHNAMOORTHY, M.A., B.L.
ADVOCATE

XXI ADD
IN THE CITY CIVIL COURT AT CHENNAI
O.S. No.4460 of 2022

M.Vanitha Murugan,
W/o. Mr.Murugan
AP-1028, 11th Sector,
68th Street, K.K. Nagar,
Chennai – 600 078
....Plaintiff
Vs.
K.Devi, W/o.Mr.Kadhirvel,
Guru Samarpanam Apartment,
16/15, 1st Floor, Mariamman Kovil Street, Kodambakkam,
Chennai – 600 024.
....Defendant

Please take notice that in the above case O.S. No.4460 of 2022 for recovery, the Hon'ble Judge, XXI Additional City Civil Court, Allikulam, Chennai, was pleased to order Notice to you by paper publication returnable for hearing on 15.12.2022.

Please make it convenient to appear in person or through a duly instructed pleader before the Hon'ble Judge, XXI Additional City Civil Court, Allikulam, Chennai on 15.12.2022 at 10.30 AM failing which the matter will be heard and decided in your absence.

SUCHIT ANANT PALANDE
Counsel for Plaintiff

SHRIRAM FINANCE LIMITED
MARAIMALAINAGAR BRANCH VEHICLE FOR SALE

S.NO.	VEH.NO.	MAKE	MODEL
1.	TN19M6078	TATA INDIGO-P	2014

CONTACT: PURUSHOTHAMAN .L 8015958965

JMJ பின்டெக் லிமிடெட்
(முன்னர் மீனாட்சி எண்டர்பிரைசஸ் லிமிடெட்)
CIN: L51102TN1982PLC009711
பதிவு அலுவலகம்: எண். 17/9, லட்சுமிபுரம் மெயின் தெரு, லாயிட்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை –600014.
email: investor@jmjfintechltd.com
Website: jmjfintechltd.com

மின்னணு தபால் வாக்கு அறிவிப்பு

நிறுவனங்கள் சட்டம் 2013 (சட்டம்), பிரிவு 110 மற்றும் பிற பொருந்தக்கூடிய விதிகள், நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014 (விதிமுறைகள்) விதி 22, செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) 2015 (செபி பட்டியல் விதிகள்). கோவிட்–19 தொற்றுநோயைக் கருத்தில் கொண்டு எம்சிஏ–வினால் வெளியிடப்பட்ட தொடர்புடைய சுற்றறிக்கைகளின்படி, டிசம்பர் 09, 2022 அன்று (கட்ஆப் தேதி) நிறுவனத்தில் அல்லது டெபாசிட்டரிகளில் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்த நிறுவனத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் மின்னணு முறையில் மட்டுமே 10 டிசம்பர் 2022 தேதியிட்ட தபால் வாக்கு அறிவிப்பு பணியை 12 டிசம்பர் 2022 அன்று நிறுவனம் அனுப்பி வைத்துள்ளது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. எம்சிஏ சுற்றறிக்கைகளின்படி தபால் வாக்கு அறிவிப்பு மற்றும் தபால் வாக்குப்படிவத்தின் காகித நகல்களை அனுப்புவது கைவிடப்பட்டுள்ளது.

உறுப்பினர்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுவது யாதெனில்,

1. ஒப்புதலுக்கான சிறப்பு வணிகம் (ஏ).

தபால் வாக்கு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தை சென்னை, நிறுவனங்களின் பதிவாளர் அதிகார வரம்பிலிருந்து, தமிழ்நாடு மாநிலத்திற்குள், கோயம்புத்தூர் நிறுவனப் பதிவாளர் அதிகார வரம்பிற்கு மாற்றப்பட சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீஸ் (இந்தியா) லிமிடெட் (சிடிஎஸ்எல்) வழங்கிய தொலைதூர மின்–வாக்களிப்பு தளம் வழியாக தபால் வாக்கு மூலம் பரிவர்த்தனை செய்யப்படுகிறது.

2. மின்னணு வாக்குப்பதிவு திங்கட்கிழமை, 12 டிசம்பர் 2022 அன்று காலை 9.00 மணிக்கு (இந்திய நேரப்படி) தொடங்கி, செவ்வாய்க்கிழமை, 10 ஜனவரி, 2023 மாலை 5.00 மணிக்கு (இந்திய நேரப்படி) முடிவடைகிறது, அதன்பிறகு, தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு தடுக்கப்படும் மற்றும் குறிப்பிட்ட நேரத்திற்கு மேல் வாக்களிப்பது அனுமதிக்கப்படாது.

3. கட் ஆப் தேதி, அதாவது 09 டிசம்பர், 2022 அன்று, நிறுவனத்தின் உறுப்பினர்கள் பதிவேட்டிலோ அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பதிவேட்டிலோ பெயர் பதிவு செய்துள்ள உறுப்பினர்கள் மட்டுமே வாக்களிக்கத் தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

4. தபால் வாக்குப்பதிவிற்கு ஆராய்வாளராக திருமதி லட்சுமி சுப்ரமணியன், பிராக்டிசிங் நிறுவன செயலாளர் அவர்களை குழு நியமித்துள்ளது.

5. தபால் வாக்கு அறிவிப்பை பெறாத உறுப்பினர்கள் investor@jmjfintechltd.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதி அதைப் பெறலாம்.

6. மின்னணு வாக்குப்பதிவு தொடர்பாக உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் அல்லது சிக்